# பெரியாழ்வார் திருமொழி 3-10
## நெறிந்த கருங்குழல்

(இலங்கைக்குத் தூது சென்ற திருவடி, பிராட்டியைக் கண்டு, சக்ரவர்த்தித் திருமகன் கூறிய சில அடையாளங்களைக் கூறிக் கணையாழி கொடுத்து களிப்பித்தல்)

0318 * நெறிந்த கருங்குழல் மடவாய் * நின்னடியேன் விண்ணப்பம் *
செறிந்த மணிமுடிச் சனகன் * சிலையிறுத்து நினைக் கொணர்ந்தது
அறிந்து ** அரசு களைகட்ட * அருந்தவத்தோன் இடைவிலங்க *
செறிந்தசிலை கொடுதவத்தைச் * சிதைத்ததும் ஓரடையாளம் (1)

0319 அல்லியம் பூமலர்க் கோதாய் * அடிபணிந்தேன் விண்ணப்பம் *
சொல்லுகேன் கேட்டருளாய் * துணைமலர்க்கண் மடமானே **
எல்லியம்போது இனிதிருத்தல் * இருந்ததோர் இடவகையில் *
மல்லிகை மாமாலை கொண்டு * அங்கு ஆர்த்ததும் ஓரடையாளம் (2)

0320 கலக்கிய மாமனத்தளளாய்க் * கைகேசி வரம் வேண்ட *
மலக்கிய மாமனத்தனனாய் * மன்னவனும் மறாதொழிய **
குலக்குமரா காடுறையப் * போ என்று விடை கொடுப்ப
இலக்குமணன் தன்னொடும் * அங்கேகியது ஓரடையாளம் (3)

0321 வாரணிந்த முலைமடவாய் * வைதேவீ விண்ணப்பம் *
தேரணிந்த அயோத்தியர் கோன் * பெருந்தேவீ கேட்டருளாய் **
கூரணிந்த வேல்வலவன் * குகனோடும் கங்கை தன்னில் *
சீரணிந்த தோழமை * கொண்டதும் ஓரடையாளம் (4)

0322 மானமெரு மென்நோக்கி * வைதேவீ விண்ணப்பம் *
கானமரும் கல்லதர் போய்க் * காடுறைந்த காலத்து **
தேனமரும் பொழிற் சாரல் * சித்திரகூடத்து இருப்ப *
பால்மொழியாய் பரதநம்பி * பணிந்ததும் ஓரடையாளம் (5)

0323 சித்திரகூடத்திருப்பச் * சிறுகாக்கை முலைதீண்ட *
அத்திரமே கொண்டெறிய * அனைத்துலகும் திரிந்தோடி **
வித்தகனே இராமாவோ * நின்அபயம் என்றழைப்ப *
அத்திரமே அதன் கண்ணை * அறுத்ததும் ஓரடையாளம் (6)

0324 மின்னொத்த நுண்ணிடையாய் * மெய்யடியேன் விண்ணப்பம் *
பொன்னொத்த மானொன்று * புகுந்து இனிது விளையாட **

நின்அன்பின் வழி நின்று * சிலை பிடித்து எம்பிரான் ஏக *
பின்னே அங்கு இலக்குமணன் * பிரிந்ததும் ஓரடையாளம் (7)

0325 மைத்தகு மாமலர்க் குழலாய் * வைதேவீ விண்ணப்பம் *
ஒத்தபுகழ் வானரக்கோன் * உடனிருந்து நினைத் தேட **
அத்தகுசீர் அயோத்தியர் கோன் * அடையாளமிவை
மொழிந்தான் *
இத்தகையால் அடையாளம் * ஈதவன் கைம் மோதிரமே (8)

0326 * திக்குநிறை புகழாளன் * தீவேள்விச் சென்ற நாள்
மிக்க பெருஞ்சபை நடுவே * வில்லிறுத்தான் மோதிரம் கண்டு **
ஒக்குமால் அடையாளம் * அநுமான் என்று உச்சிமேல் *
வைத்துக் கொண்டு உகந்தனளால் * மலர்க்குழலாள் சீதையுமே (9)

0327 * வாராரும் முலைமடவாள் * வைதேவி தனைக்கண்டு *
சீராரும் திறலனுமன் * தெரிந்துரைத்த அடையாளம் **
பாராரும் புகழ்ப்புதுவைப் * பட்டர்பிரான் பாடல் வல்லார் *
எராரும் வைகுந்தத்து * இமையவரோடு இருப்பாரே (10)